15 டிசம்பர் 2024
திருவருகைக் காலத்தின் மூன்றாம் ஞாயிறு

NEW WAY OF BEING CHURCH

# newbec

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஆன்மீக ஒன்றிப்பில் பங்குகொள்ளும் உணர்வோடு தூதுரைத்தல், கொண்டாடுதல் மற்றும் செவிமடுத்தல் (மத்தேயு 5: 13-16)

மாதாந்திர கருப்பொருள் எதிர்நோக்கின் திருப்பயணிகள்

# நன்றியோடு கூடிய இறைவேண்டல்

நாம் மகிழ்ச்சியை அனுபவிக்கும்போது, கடவுள் தரும் மகிழ்ச்சியின் சாரத்தை அனுபவிக்கிறோம். ஏனென்றால் இந்த கௌடாதே ஞாயிறு மகிழ்ச்சி என்னும் காற்றால் நிரம்பியுள்ளது. மேலும் திருவருகைக் கால சோக மனநிலையை அகற்றி, சத்தமாகவும் மகிழ்ச்சியாகவும் பாட அனைவரும் அறிவுறுத்தப்படுகிறோம். இதைத் தான் இறைவாக்கினர் செப்பானியா சீயோன் மகளிரை செய்யுமாறு அறிவுறுத்துகிறார். ஏனென்றால் ஆண்டவர் உன் தண்டனைத் தீர்ப்பைத் தள்ளிவிட்டார்; உன் பகைவர்களை அப்புறப்படுத்தினார். திருப்பாடல் ஆசிரியரும் கடவுள் அவர்கள் மத்தியில் இருப்பதால், மக்களை மகிழ்ச்சியால் ஆர்ப்பரிக்க அழைக்கிறார்.



நம்முடைய இதயங்கள் நன்றியினால் நிரம்பினால் மட்டுமே நாம் மகிழ்ச்சியாக இருக்கமுடியும். நமது உள் மனப்பான்மை என்னவாக இருக்கவேண்டும்? புனித பவுல் கூறுகிறார். ஆண்டவர் அண்மையில் இருப்பதால் எதைப் பற்றியும் கவலைப்படவேண்டாம். நாம் அறிந்துள்ள எதையும் மிஞ்சக்கூடிய அமைதியை அவர் கொண்டுவருவார். நாம் எப்போதும் எல்லாவற்றிற்கும் நன்றியோடு மன்றாடவும், இறைவேண்டல் செய்யவும் தேவையான எல்லா காரணங்களையும் இது அளிக்கிறது.

உண்மையான மகிழ்ச்சி எப்படி வரும்? தம் மகனின் மீதுகொண்ட அன்பினால் தன்னை வெறுமையாக்கிக் கொள்பவரைப் போல தம்மை வெறுமையாக்கிக்கொண்டார். மேலும் இயேசு தம் தந்தையின் மீதுகொண்ட அன்பினால் தம்மை வெறுமையாக்கினார். இந்த உன்னதமான அன்பின் வெளிப்பாடு தான் தமதிரித்துவத்தின் மூன்றாம் நபரான தூய ஆவியார்.

திருமுழுக்கு யோவான் நமக்கு சில உறுதியான எடுத்துக்காட்டுகளை முன்வைக்கிறார். மூன்றுமுறை அவரிடம் இந்தக் கேள்வி கேட்கப்பட்டது. “நாங்கள் என்ன செய்யவேண்டும்?” ஒவ்வொரு குழுவினருக்கும் அவர்கள் நியாயமாக நடந்துகொள்ளவும் சரியானதைச் செய்யவும் எச்சரிக்கிறார். இரண்டு அங்கிகளை உடையவர் இல்லாதவரோடு பகிர்ந்து கொள்ளட்டும். வரிதண்டுவோரிடம் உங்களுக்குக் குறிப்பிட்ட தொகைக்கு அதிகமாக எதையும் தண்டாதீர்கள். மேலும் உரோமை படைவீரருக்கு அவர்களின் பதவியைத் தவறாக பயன்படுத்தவேண்டாம் என்றும் அறிவுறுத்துகிறார்.

அதே கேள்வி நம்மிடம் கேட்கப்படுகிறது. “நான் என்ன செய்யவேண்டும்.” எவ்வாறு என்னை வெறுமையாக்கிக் கொள்ளவேண்டும்.?” ஒருவேளை நாம் கடவுளின் அருளுக்காக மன்றாடலாம். அனைத்தையும் விட்டு விடவும், கடவுளே நம்மை கட்டுப்படுத்தவும் அனுமதிக்கலாம். ஆண்டவரின் ஆவியார் நம்மீது இருப்பதாக. அவர் நம்மை அருள்பொழிவு செய்யவும், தொடர்ந்து ஏழைகளுக்கு அருளின் கொடைகளையும் நன்மைகளையும் கொண்டுவரும் வழிகாட்டிகளாகவும் திகழமுடியும். நம்முடைய மீட்புக்காக தம்மை வெறுமையாக்கும் ஆண்டவரிடம் எப்போதும் நன்றியுடன் இறைவேண்டல் செய்து, பாவத்தை விட்டுவிலகி, அருள் வாழ்க்கை வாழ நாம் பாடுபடும்போது, யோவான் மனம் திரும்புதலின் செய்தி நம் இதயங்களில் தொடர்ந்து ஒலிக்க வேண்டும். இறுதியில் நாம் நமது மீட்பராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்காக காத்திருக்கிறோம்.

மகிழுங்கள்!

ஒவ்வொரு நபரின் உள்ளத்திலும் எதிர்காலம் என்ன கொண்டுவரும் என்பதை அறியாவிட்டாலும், நல்லவை வரும் என்று நாம் எதிர்நோக்கிக் காத்திருக்கின்றோம்.

- திருத்தந்தை பிரான்சிஸ்







### இன்றைய இறைவார்த்தை:

நற்செய்தி குறிப்பு:

செப்பானியா 3: 14-18

திபா: எசாயா 12: 2-6

பிலிப்பியர் 4: 4-7

லூக்கா 3: 10-18

INTERNAL CIRCULATION ONLY
BUL 50/2024

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org